(6 pages)

**Reg. No. : ..........................**

**Code No. : 30493** **Sub. Code : C 1 TL 11**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2023

First Semester

Part - I - Tamil

பொதுத்தமிழ் - தாள் - I

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. 'மானம் பெரிதென உயிர் விடுவான் மற்றவருக்காகத் துயர்ப்படுவான்'- யார்?

(அ) புலவன் (ஆ) அரசன்

(இ) தமிழன் (ஈ) சான்றோன்

2. பெண்மையை ரணமாக்கிப் படைக்கப்பட்ட இலக்கியமாகக் கவிஞர் குறிப்பிடுவது

(அ) காப்பியங்கள் (ஆ) புராணங்கள்

(இ) பக்தி இலக்கியங்கள் (ஈ) புதினங்கள்

3. 'உயிரும் உடம்புமாம் ———— முதலே'

(அ) நாற்பது (ஆ) முப்பது

(இ) இருபது (ஈ) பத்து

4. பின்வருவனவற்றுள் குற்றியலிகரம்

(அ) நாகியாது (ஆ) பாம்பு தீயது

(இ) ஆடுகுறிது (ஈ) வரகுசிறியது

5. பெருந்திணைக்குப் புறன்

(அ) வாகை (ஆ) உழிஞை

(இ) கரந்தை (ஈ) காஞ்சி

6. 'விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை' என்று வருந்தியவர்

(அ) கண்ணகி (ஆ) மாதிரி

(இ) மாதவி (ஈ) கவுந்தியடிகள்

7. தமிழ்ச் சிறுகதை மன்னன் என்று அழைக்கப்படுபவர்

(அ) மேலாண்மை பொன்னுச்சாமி

(ஆ) புதுமைப்பித்தன்

(இ) சி.சு. செல்லப்பா

(ஈ) கு.பா. ராஜகோபாலன்

8. சாகித்ய அகாடமி விருது பெற்ற கல்கியின் புதினம்

(அ) பொன்னியின் செல்வன்

(ஆ) சிவகாமியின் சபதம்

(இ) அலை ஓசை

(ஈ) பார்த்திபன் கனவு



9. கவிதை வரலாற்றில் புதிய இயலைத் தொடங்கி வைத்தவர்

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன்

(இ) மேத்தா (ஈ) வைரமுத்து

10. கி.வா. ஜகந்நாதன் நாட்டுப்புறப்பாடல் குறித்து எழுதிய தொகுப்பின் பெயர்

(அ) பனிமலர்

(ஆ) தமிழக நாட்டுப்பாடல்கள்

(இ) மலையருவி

(ஈ) ஏட்டில் எழுதாக் கவிதைகள்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

வினா (அ) அல்லது (ஆ) தேர்வு செய்க.

11. (அ) பாரதியார் கேட்கும் வரங்கள் உமக்குக் கிடைத்தால் என் செய்வீர்? எழுதுக.

(அல்லது)

(ஆ) ஹைக்கூ கவிதைகள் உணர்த்தும் செய்திகளை எழுதுக.



12. (அ) வல்லினம் மிகுமிடங்கள் ஐந்தினைச் சான்றுகளுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) உயிரளபெடையின் வகைகளைச் சான்று தந்து விளக்குக.

13. (அ) புறத்திணை வாழ்வியல் குறித்த தொல்காப்பியரின் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) 'தீதின்றி வந்த பொருள் நன்மையைத் தரும்'-செல்வத்தின் சிறப்பு கட்டுரை வழி விளக்குக.

14. (அ) அன்பளிப்புச் சிறுகதை உணர்த்தும் சாரங்கனின் மன உணர்வுகளை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) தற்கொலை சிறுகதை உணர்த்தும் செய்திகளை எடுத்துரைக்க.

15. (அ) சிறுகதையின் இலக்கணம் எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்பாரிப் பாடல்கள் உணர்த்தும் துன்பியலை விளக்குக.



[P.T.O.]

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) இரவின் தனிமையில் எனக்குத் துணையாக இருக்கும் ஜீவன் என்று அப்துல் ரகுமான் குறிப்பிடுவது யாரை? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) நடைவண்டிகள் தொலைந்து போனது நன்மையா? ஆராய்க.

17. (அ) தன் மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒலிக்கும் எழுத்துக்கள் பற்றியெழுதுக.

(அல்லது)

(ஆ) சார்பெழுத்துக்களுள் ஏதேனும் ஐந்து வகைகளை விளக்குக.

18. (அ) தமிழனின் பெருமையினை இலக்கியங்கள் எங்ஙனம் பதிவு செய்துள்ளன? விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய அகத்திணைச் சமுதாயமும் இன்றைய சமுதாயமும் ஒப்பிடுக.



19. (அ) தற்கொலை சிறுகதையின் கதைக்கருவினை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வலம்புரிச் சங்கின் கீதம் இனிமையா? ஓலமா? கருத்துரைக்க.

20. (அ) நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) தொடக்க கால நாவல்கள் குறித்து விரித்துரைக்க.

———————